بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *19/07/2024* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**பனூ முஸ்தலிக் போரின் நிலைமைகள் மற்றும் நிகழ்வுகளைப் பற்றிய எடுத்துரைப்பு**
**பிரிட்டன் ஆண்டுமாநாடு மற்றும் கலந்து கொள்பவர்களுக்காக துஆக்களுக்கான வலியுறுத்தல்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

பனூ முஸ்தலிக் போர் பற்றி கடந்த குத்பாவில் கூறப்பட்டது. இதன் கூடுதல் விவரம் ஹதீஸ் மற்றும் வரலாற்றில் கிடைக்கிறது. சஹீஹ் புகாரீயில் இதன் விவரத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பனூ முஸ்தலிக் மீது தாக்குதல் தொடுத்த போது, அவர்கள் கவனக்குறைவாக இருந்தார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் இந்த நிகழ்வு குறித்து கூறுகிறார்கள்:- இந்தப் போர் பற்றி சஹீஹ் புகாரீயில் ஓர் அறிவிப்பு இவ்வாறு உள்ளது: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பனூ முஸ்தலிக் மீது தாக்குதல் தொடுத்த நேரத்தில், அவர்கள் கவனமற்றவர்களாக தங்களுடைய கால்நடைகளுக்குத் தண்ணீர் புகட்டிக் கொண்டிருந்தார்கள். கவனமாகப் பார்க்கப்பட்டால், இந்த அறிவிப்பு வரலாற்றாசிரியர்களின் அறிவிப்புக்கு முரணானது ஒன்றும் அல்ல. உண்மையில், இவ்விரு அறிவிப்புகள் இரு வேறு நேரங்களுடன் தொடர்புடையவை. இவ்வாறு நிகழ்ந்துள்ளது:

இஸ்லாமிய படை பனூ முஸ்தலிக்குக்கருகில் சென்றடைந்த போது, அவர்களுக்கு முஸ்லிம்கள் மிகவும் அருகில் வந்து விட்டார்கள் என்பது தெரியாமல் இருந்தது. ஆயினும், இஸ்லாமிய படை வரப்போவது பற்றிய தகவல் அவர்களுக்குக் கண்டிப்பாக கிடைத்து விட்டிருந்தது. அவர்கள் நிதானமாக ஒரு வரிசையற்ற நிலையில் கிடந்தார்கள். இந்த நிலையையே புகாரீயின் அறிவிப்பு சுட்டிக் காட்டுகிறது. ஆனால், இஸ்லாமிய படை வந்து சேர்ந்த தகவல் கிடைத்ததும் அவர்கள் தங்களுடைய நிரந்தரமான முந்தைய ஏற்பாடுக்கு ஏற்ப உடனடியாக அணிவகுத்து போருக்கு ஆயத்தமாகி விட்டார்கள். வரலாற்றாசிரியர்கள் குறிப்பிட்டது இந்த நிலையைத்தான்.

இந்தப் போரில் ஒரு சஹாபி மட்டுமே ஷஹீதானார்கள். அதுவும் தவறுதலாக, முஸ்லிம் ஒருவர் இவர்களை நிராகரிப்பாளர் எனக் கருதி தவறுதலாக ஷஹீது ஆக்கி விட்டிருந்தார்.

உம்முல் முஃமினீன் ஹஸ்ரத் ஜுவைரியா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:- இந்தப் போர் அன்று நான் என் தந்தை இவ்வாறு கூறுவதைக் கேட்டேன்: 'எவ்வளவு பெரிய படை வந்து விட்டது என்றால், அதை எதிர்த்துப் போரிடும் ஆற்றல் எங்களுக்கு இல்லை.'

ஹஸ்ரத் ஜுவைரியா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நானே எவ்வளவு அதிகமான மக்கள், ஆயுதங்கள் மற்றும் குதிரைகளைப் பார்த்துக் கொண்டிருந்தேன் என்றால், என்னால் எடுத்துரைக்கவே முடியாது. நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என்னுடன் திருமணம் செய்து கொண்ட பிறகு, நாங்கள் திரும்பி வந்ததும் முஸ்லிம்கள் எனக்கு முன்னரைப் போன்று அதிகமாகத் தென்படவில்லை. அப்பொழுது இது அல்லாஹ் தன் தரப்பிலிருந்து இணைவைப்பாளர்களின் உள்ளத்தில் போடுகின்ற மதிப்பச்சமாகும் என்பதை அறிந்தேன்.

போர்ச் செல்வத்தில் கிடைக்கப் பெற்ற ஒட்டகங்களின் எண்ணிக்கை ஈராயிரமாக இருந்தது. ஆடுகளின் எண்ணிக்கை ஐயாயிரமாக இருந்தது. சிறைபிடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 200 வீடுகளை உள்ளடக்கியதாக இருந்தது. சில வரலாற்றாசிரியர்கள் சிறைபிடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை எழுநூறுக்கும் மேற்பட்டதாகக் கூறியுள்ளார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் புரைதா (ரலி) அவர்களை இந்த சிறைபிடிக்கப்பட்டவர்களின் கண்காணிப்பாளராக நியமித்தார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) முழு போர்ச் செல்வங்களிலிருந்தும் ஐந்தில் ஒரு பங்கை எடுத்தார்கள். ஐந்தில் ஒரு பங்கு என்பது எல்லாம் வல்ல அல்லாஹ்வின் கட்டளைக்கு ஏற்ப, போர்ச் செல்வத்தில் இருந்து, அல்லாஹ், அவனுடைய தூதர் (ஸல்) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நெருங்கிய உறவினர்கள் மற்றும் பொதுவான இஸ்லாமிய தேவைகளுக்காக தனியாக எடுத்து வைக்கப்படக்கூடிய ஐந்தில் ஒரு பங்காகும்.

இந்தக் கோத்திரத்தில் சிறை பிடிக்கப்பட்டவர்களில் கோத்திரத்தின் தலைவர் ஹாரிஸ் பின் அபீ ஸீராரின் மகள் பர்ரஹ்வும் இருந்தார்கள். அவர்களின் பெயரை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மாற்றி ஜுவைரியா என்று வைத்து விட்டார்கள். கைதிகளைப் பிரித்துக் கொடுக்கும் போது, ஹஸ்ரத் ஜுவைரியா (ரலி) அவர்கள் ஓர் அன்ஸாரீ

சஹாபி ஹஸ்ரத் சாபித் பின் கைஸ் (ரலி) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார்கள்.

பர்ரஹ் அவர்கள் ஹஸ்ரத் சாபித் பின் கைஸ் (ரலி) அவர்களுடன் முகாத்திபத் என்ற வழிமுறை படி உடன்படிக்கை செய்து கொண்டார்கள். (முகாத்திபத் என்பது, ஓர் அடிமை அல்லது அடிமைப்பெண் தன் எஜமானருடன் தான் ஒரு குறிப்பிட்ட தொகையை செலுத்தி சுதந்திரமாகி விடுவேன் என்று உடன்படிக்கை செய்து கொள்வதாகும்.) இங்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த தொகை 9 ஊகியா தங்கம் ஆகும். அது 360 திர்ஹம் ஆகிறது.

இந்த உடன்பாட்டுக்குப் பிறகு பர்ரஹ் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மேலான சமூகத்திற்குச் சென்று நிலைமை அனைத்தையும் கூறினார்கள். மேலும், 'நான் பனூ முஸ்தலிகின் தலைவரின் மகள்' என்பதைக் கூறி ஈட்டுத் தொகையை செலுத்துவதில் ஹுஸூர் (ஸல்) அவர்களின் உதவியை நாடினார்கள்.

இவர்களின் கதையைக் கேட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் தாக்கத்திற்கு உள்ளானார்கள். அநேகமாக, இவர்கள் ஒரு பிரிசித்திபெற்ற கோத்திரத்தின் தலைவரின் மகள் ஆவார்கள்; இவர்களுடைய தொடர்பின் மூலமாக தப்லீக் பணியில் எளிமை ஏற்படலாம் என்றெண்ணி, ஹுஸூர் (ஸல்) அவர்கள் இவர்களுடன் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்தார்கள். பர்ரஹ் அவர்கள் சம்மதம் தெரிவித்ததும், ஹுஸூர் (ஸல்) அவர்கள் ஈட்டுத் தொகையை செலுத்தி அவர்களைத் திருமணம் செய்து கொண்டார்கள்.

சஹாபா பெருமக்கள் இதைப் பார்த்த போது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் துணைவியார் வீட்டு மக்களைத் தங்களுடைய கையில் சிறைபிடித்து வைப்பதை விரும்பவில்லை. எனவே, நூறு வீட்டு மக்கள், அதாவது, நூற்றுக்கணக்கான கைதிகள் ஈட்டுத் தொகை செலுத்தப்படாமல், ஒரேயடியாக விடுதலை செய்யப்பட்டார்கள். இதன் காரணமாகவே, ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், 'ஜுவைரியா தமது சமுதாயத்திற்கு மிகவும் அருளுக்குரிய நபராகத் திகழ்ந்துள்ளார்' என்று கூறி வந்தார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அந்தப் போரிலிருந்து வெற்றி வாகை சூடியவர்களாக திரும்பி வந்தார்கள். மொத்தம் 28 நாள்கள் பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனாவில் இருந்து வெளியே இருந்தார்கள்.

இந்தப் போரிலிருந்து திரும்பி வந்த போது, நயவஞ்சகர்களின் தலைவன் அப்துல்லாஹ் பின் ஒபை பின் ஸலூல் உடைய நயவஞ்சகம் அம்பலமாகி விட்டது. ஒரு நிகழ்வில் அப்துல்லாஹ் பின் உபை குறைஷிகள் மற்றும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு

எதிராகத் தன் கோத்திரத்து மக்களைத் தூண்டிவிட முயற்சி செய்தான். மேலும், ‘மதீனாவுக்குத் திரும்பிச் சென்று, எல்லாரையும் விட கண்ணியத்திற்குரியவர் எல்லாரையும் விட இழிவான மனிதனை நகரத்திலிருந்து வெளியேற்றி விடுவார்’ என்ற அளவுக்குக் கூறினான்.

ஹஸ்ரத் ஸைது பின் அர்கம் (ரலி) அவர்கள் இந்த சந்தர்ப்பத்தில் தன்மானத்தை வெளிப்படுத்தினார்கள். அப்துல்லாஹ் பின் உபையை இடைமறித்து, ‘நீயே உனது சமுதாயத்தில் இழிவானவனாவாய்’ என்று கூறினார்கள். பிறகு, ஸைது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் சென்று அவன் கூறிய எல்லா விஷயத்தையும் கூறி விட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஸைது கூறிய விஷயத்தை விரும்பவில்லை. அன்னார் கூறினார்கள்: பாலகனே! உனக்கு இப்னு உபை மீது கோபம் என்று நினைக்கிறேன்.

அறிவிப்புகளில் வருகிறது, அதற்குப்பிறகு அப்துல்லாஹ் பின் உபை தானாகவோ அல்லது யாரோ கூறியதனாலோ ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்தான். மேலும், ஸைது கூறிய அனைத்தும் தவறு என்று இறைவன் மீது ஆணையிட்டுக் கூறினான்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் அப்துல்லாஹ் பின் உபை கண்டிப்பாகப் பேசியுள்ளான் என்று நினைத்தார்கள். இதற்குப் பிறகு, ஹுஸூர் (ஸல்) அவர்கள் புறப்படக் கட்டளையிட்டார்கள். அன்ஸாரிகளில் சில தலைவர்கள் பணிவுடன் வினவிய போது, அன்னார் ‘உங்களுடைய தோழர் என்ன கூறினார் என்று உங்களுக்குத் தெரியாதா?’ எனக் கேட்டார்கள். அதாவது, மதீனாவுக்குத் திரும்பிச் சென்று, எல்லாரையும் விட அதிகம் கண்ணியம் உடைய மனிதர் எல்லாரையும் விட அதிகம் இழிவானவனை நகரத்திலிருந்து வெளியேற்றி விடுவார் என்ற விஷயம்.

இதைக் கேட்ட அந்த கலப்பற்ற அன்ஸாரி சஹாபா, ‘அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நிச்சயமாக தாங்கள் எல்லாரையும் விட கண்ணியத்திற்குரியவர் ஆவீர்கள். கண்ணியம் அனைத்தும் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதர் (ஸல்) அவர்களுக்கும் உரியது. தாங்கள் விரும்பினால், அப்துல்லாஹ் பின் உபையை நகரத்திலிருந்து வெளியேற்றி விடுங்கள். விரும்பினால் அவனுடன் மென்மையாக நடந்து கொள்ளுங்கள்’ என்று பணிவுடன் கூறினார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* அப்துல்லாஹ் பின் உபை கூறிய விஷயம் தொடர்பாக, ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் எடுத்துரைத்துள்ள விவரம் இனி எடுத்துரைக்கப்படும். இன் ஷா அல்லாஹ்.

*இதற்குப் பிறகு, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* அடுத்த ஜுமுஆ பிரிட்டனின் ஆண்டு மாநாடும் துவங்கும். இன் ஷா அல்லாஹ். அதற்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹுத்தஆலா எல்லா வகையிலும் அருளுக்குரியதாக ஆக்குவானாக!

பணியாளர்கள் அனைவருக்கும் உயர் நல்லொழுக்கத்தைக் காட்டியவாறு, தியாக உணர்வுடன், தங்களுடைய கடமைகளை நிறைவேற்றுவதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக! வந்திருக்கும் விருந்தினர்களையும், பயணத்தில் இருப்பவர்களையும் என அனைவரையும் தனது பாதுகாப்பில் வைப்பானாக! (ஆமீன்.)

*குத்பாவின் இறுதிப்பகுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மூன்று மர்ஹூம்களின் நற்குறிப்புகளை எடுத்துரைத்தவாறு ஜனாஸா காயிப் தொழவைப்பதாக அறிவிப்பு செய்தார்கள்.*

1. வட இந்தியாவுக்கான நாஸிர் தஃவத்தே இலல்லாஹ் ஹமீத் கவ்ஸர் சாஹிப் அவர்களின் துணைவியார் **மதிப்பிற்குரிய சலீமா பானூ சாஹிபா** அவர்கள் ஆவார்கள். மர்ஹூமா மூஸீயாவாக இருந்தார்கள். பெரும் விருந்தோம்பல் பண்பு, எளிமையான இயல்புக்கு சொந்தக்காரர், துஆக்கள் செய்யக்கூடியவர், நஃபில்களை முறையாகக் கடைபிடிப்பவர் மற்றும் சிக்கனத்தை விரும்பக்கூடிய பெண்மணி ஆவார்கள். இவர்களுக்கு பம்பாயின் சத்ர் லஜ்னாவாகத் தொண்டாற்றும் நல்வாய்ப்பு கிடைத்தது. மர்ஹூமா அவர்களின் கணவர் கபாபீரில் முபல்லிக் ஆக இருந்தபோது, அங்கு மிக விரைவாகப் பேச்சு வழக்கு அரபியைக் கற்றார்கள். பெண்களின் தஃலீம் மற்றும் தர்பிய்யத்தில் முழுமையாகப் பங்களித்தார்கள். மர்ஹூமா அவர்களுக்கு ஒரு காலம் வரை கபாபீரின் சத்ர் லஜ்னாவாகத் தொண்டாற்று நல்வாய்ப்பு கிடைத்தது. அங்கு இஜ்திமா நடத்துவதை ஆரம்பித்து வைத்தார்கள்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் கபாபீரின் லஜ்னா இமாயில்லாஹ் இஜ்திமா தொடர்பாக இவர்களைப் புகழ்ந்தவாறு இவ்வாறு கூறினார்கள்: 'கபாபீர் லஜ்னா இமாயில்லாஹ் முழுக்கமுழுக்க அரேபிய பெண்களை உள்ளடக்கிய லஜ்னா அமைப்பாகும். அவர்களில் ஒருவர் மட்டும் இந்தியாவில் உள்ள காஷ்மீரிலிருந்து சென்ற பெண்மணி இருக்கிறார்கள். ஆனால், அவர்களும் இப்பொழுது முற்றிலும் அரேபியர்கள் போன்று ஆகி விட்டார்கள்.' இவர்கள் அவர்களுடன் கலந்து அவர்களுக்குத் தர்பிய்யத் செய்தார்கள். பின்விட்டுச் சென்றவர்களில், ஒரு மகள் மற்றும் இரண்டு மகன்கள் இருக்கிறார்கள்.

ஒரு மகன் அத்தாவுல் மஜீத் முபஷ்ஷிர் கவ்ஸர் யூகேவின் MTA அல் அரபிய்யாவில் தொண்டாற்றுகிறார்கள். மகள் புஷ்ரா கவ்ஸர் சாஹிபா அவர்கள் டாக்டர் அய்மன் ஓதே அவர்களின் துணைவியார் ஆவார்கள்.

லஜ்னா இமாயில்லாஹ் ஹாலாந்தில் தேசிய கித்மத்தே கல்க் செயலராகத் தொண்டாற்றுகிறார்கள்.

இளைய மகன் ஷரீஃப் கவ்ஸர் காதியானில் இயக்கத்தின் முரப்பியாக இருக்கிறார்கள். மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவில் துணை சத்ராக உள்ளார்கள். ஒலியும் ஒளியும் துறையின் அடிஷனல் இன்சார்ஜ் ஆகவும் உள்ளார்கள். அல்லாஹ் இவர்களுக்குப் பாவமன்னிப்பு வழங்கி, இவர்களோடு கருணையுடன் நடந்து கொள்வானாக! இவர்களுடைய சந்ததிகளில் இவர்களின் நன்மைகளைத் தொடரச் செய்வானாக!

**2. லாஹூரைச் சேர்ந்த மதிப்பிற்குரிய நூருல் ஹக் மஸ்ஹர் சாஹிப்** அவர்கள் ஆவார்கள். மர்ஹூம் மூஸீயாக இருந்தார்கள். பெரும் பொறுமையாளர், துணிச்சல் மிக்கவர், தஹஜ்ஜுத் தொழுபவர், ஐநேரத் தொழுகைகளை முறையாகப் பேணுபவர், திருக்குர்ஆனை ஓதுவதற்கான ஆர்வம் கொண்டிருப்பவர், வள்ளல் மனம் படைத்தவர், ஏழைகளைக் கருத்தில் கொள்பவர் மற்றும் நற்பண்புக்குப் பெயர் போனவராக இருந்தார்கள். மர்ஹூம் அவர்களின் மகன் ராஃகிப் ஸியாவுல் ஹக் மற்றும் மகள் அமத்துல் மதீன் சாஹிபா ஆகியோர் செயல்களத்தில் தொண்டுகள் ஆற்றுவதன் காரணமாக தந்தையின் ஜனாஸாவில் கலந்து கொள்ள முடியவில்லை.

**3.** ரப்வாவைச் சேர்ந்த மர்ஹூம் முஹம்மத் ஷஃபீ சாஹிப் அவர்களின் துணைவியார் **மதிப்பிற்குரிய அமத்துல் ஹஃபீஸ் நிக(ஹ)த் சாஹிபா** அவர்கள் ஆவார்கள். மர்ஹூமா தொழுகை மற்றும் நோன்பை முறையாகப் பேணி வந்தார்கள். அதிகமாக துஆக்கள் செய்யக்கூடியவர், கிலாஃபத்துடன் அளப்பரிய தொடர்பு கொண்டிருப்பவர், தப்லீகில் ஆர்வம் கொண்டவர், ஏழைகள் மற்றும் நோயாளிகளை கவனித்துக் கொள்ளக்கூடியவர் மற்றும் உன்னதமான நல்லொழுக்கங்களுக்கு சொந்தக்காரப் பெண்மணியாக இருந்தார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் எல்லா மர்ஹூம்களின் பாவமன்னிப்பு மற்றும் அந்தஸ்த்தின் உயர்வுக்காக துஆ செய்துள்ளார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)**